## *27*

# புதிய மேலாண்மையின்கீழ்

## (6:15-23)

*அமெரிக்க ஐக்கிய நாட்டில் நாங்கள் சிலவேளைகளில், வியாபாரம் செய்யும் இடம் ஒன்றில் பெரிய விளம்பர அட்டை பின்வரும் வார்த்தைகளுடன் காட்சிப்படுத்தப்படுவதை நாங்கள் காண்கிறோம்:* ***"புதிய மேலாண்மையின் கீழ்."*** *இந்த விளம்பரமானது, அந்த வியாபாரம் ஒரு புதிய உரிமையாளரைக் கொண்டுள்ளது என்று நாங்கள் அறியச்செய்கிறது, ஆனால் அது வேறுசிலவற்றையும் கூறுகிறது. அது வழக்கமாக, மேம்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள் மற்றும் மிகச்சிறந்த சேவை உட்பட, அதிகமானவற்றை அந்த வியாபாரத்திலிருந்து இப்போது எதிர்பார்க்க முடியும் என்பதை அதன் வலிவான வாடிக்கையாளர்கள் அறிய அனுமதிக்கிறது. ரோமர் 6:15-23ல் பவுல், செயல்விளைவில், பின்வரும் விளம்பரத்தை நமது வாழ்வுகளில் ஆணியடித்துத் தெரிவிக்கிறார்:* ***"புதிய மேலாண்மையின்கீழ்!"*** *கடந்தகாலத்தில் நமதுவாழ்வுகள் பாவத்தினாலும் சாத்தானாலும் "மேலாண்மை" செய்யப்பட்டிருந்தன, ஆனால் நாம் "கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம்" (1 கொரிந்தியர் 6:20); நாம் இப்போது தெய்வீக "மேலாண்மையின்"கீழ் இருக்கிறோம். இந்த உண்மையானது நமது வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தேவன் நம்மிடத்திலிருந்து அதிகமானவற்றை எதிர்பார்க்கிறார், மற்றும் உலகமும் நம்மிடத்திலிருந்து அதிகமானவற்றை எதிர்பார்க்கிறது, ஏனென்றால் நாம் இப்போது "புதிய மேலாண்மையின்கீழ்" இருக்கிறோம்.*

*"கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை வாழ்வது எவ்வாறு?" என்ற பாடத்திற்கான நமது வேதவசனப்பகுதி பின்வரும் வார்த்தைகளுடன் முடிந்தது: "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் ..." (ரோமர் 6:14). இது, நாம் "ஒரு சட்டமுறைமையின் கீழ்" அல்ல, ஆனால் "ஒரு கிருபையின் முறைமையின்கீழ்" இருக்கிறோம் என்று அர்த்தப்படுவதாக நாம் கருத்துத் தெரிவித்தோம். ஒரு சட்டமுறைமையானது, நியாயப்பிரமாணத்தைப் பூர்ணமாகக் கடைப்பிடிப்பதினால் இரட்சிப்பு வருகிறது என்றிருக்கையில், ஒரு கிருபைமுறைமையானது, இரட்சிப்பு தேவனிடத்தில் இருந்து வருகிற கொடையாக உள்ளது என்றிருக்கிறது.*

*பவுல் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துகையில்கூட, அவர் ஒரு மறுப்பை முன்னெதிர்நோக்கினார்: "இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக்[1] கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா?" (வசனம் 15அ). மக்களில் சிலர் இந்த முடிவை அடைந்திருந்தனர் என்பது தெளிவு. நாம் ஒரு நியாயப்பிரமாண முறைமையின்கீழ் இராதிருந்தால், நாம் எந்த நியாயப்பிரமாணத்தையும் கடைப்பிடித்தலிலிருந்து விடுதலையாகி இருக்கிறோம் என்று அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள், "பாவம் நிறைந்த*

*வாழ்வு உட்பட, நாம் விரும்பியதையெல்லாம் செய்ய நாம் சுதந்தரமாக இருக்கிறோம்" என்று கூறுவதுபோல் வாழ்கின்றனர். இந்த ஆலோசனைக்குப் பவுலின் பதிலுரை அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது: "கூடாதே!" (வசனம் 15ஆ). அவர் இதேபோன்ற ஒரு கேள்வியை 1ம் வசனத்தில் கேட்டு, இது போன்றே அதற்குப் பதில் அளித்திருந்தார் (வசனம் 1அ).*

*ஒருசில எழுத்தாளர்கள், 1 மற்றும் 15 ஆகிய வசனங்களில், பாவத்தைப்பற்றிய கேள்விகள் சற்றே மாறுபடுவதாக நினைக்கின்றனர்.[2] 1ம் வசனத்தில் பவுல், "பாவத்திலே* <u>நிலைநிற்கலாமா</u> *... ?" என்று கேட்டார், அதே வேளையில் 15ம் வசனத்தில் அவர்,* <u>"பாவஞ்செய்யலாமா?"</u> *என்று கேட்டார். சிலர், 1ம் வசனத்தில் பவுல், "நாம்* <u>பாவம் நிறைந்த வாழ்வுநடையைத்</u> *தொடரலாமா?" என்று கேட்டு, அதே வேளையில் 15ம் வசனத்தில் அவர் "*<u>அவ்வப்போது</u> *பாவம் செய்தல் என்பது சரியானதாகுமா?" என்று கேட்டதாக நம்புகின்றனர். இப்படிப்பட்ட வித்தியா சங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றாலும் இல்லையென்றாலும், பாவமும் பாவம் செய்தலும் கிறிஸ்தவ வாழ்வுநடையுடன் ஒத்திசையாதவையாக உள்ளன என்பதைக் கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும் என்றே பவுல் விரும்பினார்.* F. F. *புரூஸ் என்பவர், " 'கிருபையின் கீழ்' இருத்தல் என்பதைப் பாவம் செய்வதற்குச் சாக்குப்போக்காக நடத்துதல் என்பது ஒருவர் 'கிருபையின் கீழ்' இருப்பதே இல்லை என்பதற்கு அடையாளமாக உள்ளது" என்று கூறினார்.[3]*

*ரோமர் 6 மற்றும் 7ம் அதிகாரங்களில், பவுல் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ஏன் பாவம் செய்யக்கூடாது என்பதற்குப் பல காரணங்களைக் கொடுத்தார். நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றபோது (வசனம் 3), நாம் பாவத்திற்கு மரித்தோம் (வசனம் 2) என்பது 6:1-14ல் உள்ள காரணமாகும். நாம் பாவத்திற்கு மரித்தபோது, இது நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்தி லிருந்து விடுவித்தது (வசனங்கள் 7, 9, 14). இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியில் (6:15-23), பவுல் அடிமைத்தனம் பற்றிய தனது ஒப்புவமையை மீண்டும் கூறத்தொடங்கி விரித்துரைத்தார். நாம் பாவத்திற்கு ஊழியம் செய்யக்கூடாது, ஏனென்றால் நாம் இனியும்* <u>பாவத்திற்கு</u> *அடிமைகள் அல்ல, ஆனால் நாம்* <u>தேவனுக்கு</u> *அடிமைகளாயிருக்கிறோம். நாம் "புதிய மேலாண்மையின்கீழ்" இருக்கிறோம் என்பதே பவுலின் அடிப்படையான வாதமாக இருக்கிறது.*

## *நிரூபிக்கப்பட்ட ஒரு முடிவு (6:16)*

*பவுல் "எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக் கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய்[4] இருக்கிறீர்களென்று அறியீர்களா?" என்று கேட்டுத் தொடங்கினார் (வசனம் 16). முதல் நூற்றாண்டில் இதைக் கேள்விப்பட்டவர்கள் அடிமைத்தனத்துடன் நெருங்கிய பழக்கம் உடையவர்களாயிருந்தனர். ரோமாபுரி மக்கள்தொகையிலும் ரோமப்பேரரசிலும், அடிமைகள் உயர்ந்த அளவு சதவிகிதத்தில் இருந்தனர். பவுலின் வாசகர்களில் பலர், ஒருவேளை பெரும்பான்மையானவர்கள், சட்டப்பூர்வமாகவும் அரசியல்ரீதியாகவும் சுயாதீனர்களாக இருந்தனர்; ஆனால் ஆவிக்குரிய வகையில், ஒவ்வொரு மனிதரும் ஏதேனும் ஒன்றிற்கு அடிமையாக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் [பவுல்] விரும்பினார். ஒவ்வொரு நபரும் ஏதேனும் ஒன்றிற்குக்* <u>கீழ்ப்படிகிறார்</u> *- அது அவரது சுயப்பேரார்வங்களாகவோ அல்லது விருப்பங்களாகவோகூட இருக்கலாம். அவ்வாறு செய்வதில், அவர்*

அந்த விஷயத்திற்கு அடிமையாகின்றார்.

பவுல், "... மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும்" என்று தொடர்ந்தார் (வசனம் 16). நிறைவாக, ஊழியத்துவம் குறித்து ஒரு தனிநபரின் தேர்ந்துகொள்ளுதல் என்பது இரு தேர்ந்துகொள்ளுதல்களில் அடங்குகிறது: அவர் தமது இச்சைகளுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்துப் பாவத்திற்கு அடிமையாயிருக்கலாம், அல்லது அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்து (வசனம் 17) கர்த்தரைத் தமது எஜமானராகக் கொண்டிருக்கலாம்.

"நான் *எவரொருவருக்கும்* அடிமையல்ல! நான் *சுயாதீனமானவன்!*" என்று சிலர் மறுப்புரைக்கலாம். யூதர்கள் அவ்விதமாக உரிமைகோரியபோது (யோவான் 8:33), அவர்களுக்கு இயேசு, "பாவஞ்செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" என்று கூறினார் (வசனம் 34). தேவபக்தியற்ற வாழ்க்கையை வாழும் பலர், தாங்கள் எவ்வாறு அடிமைப்பட்டிருக்கின்றனர் என்று அறிவதில்லை. எலிப்பொறிக்குள் அகப்பட்டுக்கொண்ட எலியைப் பற்றிய கேலிச்சித்திரம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. அந்த எலி, "நான் ஒரு பொறியை வைத்திருக்கிறேன்!" என்று கூற, அந்த பொறியோ, "நான் ஒரு எலியை வைத்திருக்கிறேன்!" என்று கூறிற்று. அந்தப்பொறி "பாவம்" என்று பெயரிடப்பட்டது, அதற்குள்ளிருந்த எலி "ஒரு பாவி" என்று பெயரிடப்பட்டது.

நீங்கள் ஒரு அடிமையாகவே *இருப்பீர்கள்;* நீங்கள் *யாருடைய* அடிமையாக இருப்பீர்கள் என்பதுதான் கேள்வியாக உள்ளது. 16ம் வசனத்தின்படி, நீங்கள் பாவத்திற்கு அடிமையாயிருந்தால், நீங்கள் "மரணத்தைக்கொண்டு" - ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டு - சபிக்கப்படுவீர்கள். நீங்கள் தேவனுக்கு ஊழியம் செய்தால், நீங்கள் "நீதியைக்கொண்டு" - கர்த்தருடன் சரியாக நிற்குதலைக் கொண்டு - ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

பாவம் அல்லது தேவன் - நாம் யாராவது ஒருவருக்கு ஊழியம் செய்வோம்; நாம் இருவருக்கும் ஊழியம் செய்ய முடியாது. இயேசு, "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" என்று கூறினார் (மத்தேயு 6:24அ). இன்றைய நாட்களில், சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைக் கொண்டிருந்து, இவ்வாறாக பல "எஜமானர்களுக்கு" (வேலை தருபவர்களுக்கு) ஊழியம் செய்கின்றனர், ஆனால் அடிமை ஒருவருக்கு அது தேர்ந்துகொள்ளுதலாக இருப்பதில்லை. அடிமை கொண்டுள்ள யாவும் - அவரது நேரம் உட்பட - அவரது எஜமானருக்குரியதாக உள்ளது. "நீங்கள் மரணத்திற்கு வழிநடத்துகிற பாவத்திற்கு அடிமைகளாயிருந்துகொண்டே அதேவேளையில் நீதிக்கு வழிநடத்துகிற கீழ்ப்படிதலுக்கும் அடிமைகளாயிருக்க முடியாது" (ரோமர் 6:16; JB வேதாகமம்).

## முந்தியதொரு உறுதிப்பாடு (6:17, 18)

பவுல் 16ம் வசனத்தின் பொதுவான கொள்கையிலிருந்து தமது வாசகர்களின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு கடந்து சென்றார். அவர்களுடைய முந்திய உறுதிப்பாட்டைப் பற்றி அவர் பேசினார்:

> முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வ

*மாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள் (வசனங்கள் 17, 18).*

*கடந்தகாலத்தில், அவர்கள் "பாவத்திற்கு அடிமைகளாய்" இருந்தனர், ஆனால் அவர்கள் தங்கள் பற்றுறுதியை மாற்றத் தேர்ந்துகொண்டு கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தனர். "கீழ்ப்படி[தல்]" என்பது hupakoe, "கேள்விப்படுதல்" (akouo), "கீழே" (hupo) என்று நேரடி அர்த்தப்படும் இருவார்த்தைகளின் கூட்டுச்சொல்லாக உள்ளது.[5] இது கேள்விப்பட்டது குறித்து ஒரு நேர்மறைப் பதில்செயலைக் குறிக்கிறது (யாக்கோபு 1:22ஐக் காணவும்). வேதாகமத்தில் இவ்வார்த்தை ஏறக்குறைய "மதரீதியான முடிவை மறைமுகமாக உணர்த்துகிறது."[6]*

*"விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு வருகிறது" என்று போதிப்பவர்கள், 16 மற்றும் 17ம் வசனங்களில் கீழ்ப்படிதல் பற்றிய பவுலின் வலியுறுத்தத்தை வசதிக்குறைவாக உணருகின்றனர், விசேஷமாக கீழ்ப்படிதல் என்பது பாவத்தினின்று விடுதலையாகியிருத்தலுக்கு முன்னதாக வைக்கப்பட்டுள்ளது அவர்களுக்குச் சங்கடமாக உள்ளது (வசனங்கள் 17, 18). இருப்பினும், இங்கு பவுலின் வார்த்தைகள் எல்லா மனிதர்களையும் "விசுவாசத்திற்குக் கீழ்ப்படிதலைக் கொண்டுவருதல்" (1:5; 16:26ஐக் காணவும்) என்ற அவரது இலக்குடன் சீர்பொருத்தமானவைகளாக உள்ளன. டக்ளஸ் J. மூ என்பவர், "பவுல் கீழ்ப்படிதல் என்ற விஷயத்தின் முக்கியத்துவத்தை ஆணியறைந்தாற்போல் வலியுறுத்த விரும்புகிறார் என்பது தெளிவு" என்று எழுதினார்.[7]*

**"உபதேச சட்டம்"**

*பவுலின் வாசகர்கள் "[அவர்களுக்கு] ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு ... மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்[திருந்தனர்]" (6:17ஆ). உபதேச சட்டம் என்பற்குரிய ஆங்கில வார்த்தையான "form of teaching" என்பதிலுள்ள "form" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள tupos என்ற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் நாம் "type" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம்.[8] Tupos என்பது ஒரு "வடிவம், உருவகம், [அல்லது] மாதிரி" என்பதைக் குறிக்கக்கூடும். ரோமர் 6:17ல், இது "உபதேசத்தின் வடிவம்" ஒன்றைக் குறிக்கிறது.[9] இது கி.பி. 50களிலேயே கர்த்தருடைய சபைகளில் உபதேசத்தின் சீரான வடிவம் ஒன்றிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த "உபதேசத்தின் மாதிரி" என்ன என்பதைப் பற்றி எழுத்தாளர்கள் யூகம் செய்கின்றனர், ஆனால் வேறொரு இடத்தில் பவுல், தாமும் ஏவுதல் பெற்ற மற்ற சுவிசேஷ ஊழியர்களும் பிரசங்கித்த செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதி பற்றித் தெளிவாக உரைத்தார். அவர் கொரிந்து நகரிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 2:2). மீண்டுமாக, அவர்களுக்கு அவர், "நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும்[10] என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து" என்று கூறினார்*

*(1 கொரிந்தியர் 15:3, 4).* "ரோமவிசுவாசிகளின் பாவங்களுக்காக[வும்] இயேசு மரித்து அவர்களுக்குப் புதிய ஜீவனைக் கொடுப்பதற்காக உயிர்த்தெழுந்தார் என்பதே அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட *உபதேச சட்டமாக* இருந்தது" என்று எழுதிய விளக்கவுரையாளர்களுடன் நான் கருத்து ஒருமைப்படுகிறேன்.[11]

ரோமர் 6ன் முற்பகுதியில், ஞானஸ்நானம் பற்றிய பவுலின் போதனையில் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற பாடமே மையக்கருத்தாக இருந்தது. பல விளக்கவுரையாளர்கள், 4ம் வசனத்தைக் கடந்ததும், ஞானஸ்நானத்தின் பாடக்கருத்தைக் கவனியாது விடுவதைத் தேர்ந்துகொள்கின்றனர்; ஆனால், வில்லியம் பார்க்ளே என்பவர் சுட்டிக்காண்பித்தபடி, இப்போது கலந்துரையாடலிலுள்ள வசனப்பகுதி யானது, "ஞானஸ்நானம் பற்றிய கலந்துரையாடலிலிருந்து" உதித்துள்ளது.[12] பவுலின் வாசகர்கள் ஞானஸ்நானம் பெற்று, அந்த "உபதேச சட்டத் திற்கு" அல்லது மாதிரிக்குக் கீழ்ப்படிந்திருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் *மரணத்திற்குள்ளாக* ஞானஸ்நானம் பெற்று, ஞானஸ்நானத் தண்ணீரில் அவருடன் *அடக்கம்பண்ணப்பட்டு,* மற்றும் புதிய ஜீவனுள்ளவர் களாக நடந்துகொள்ளும்படிக்கு *உயிர்ப்பிக்கப்பட்டிருந்தனர்.* ஜேம்ஸ் மெக்நைட் என்பவர், *tupos* என்பதை "வார்ப்பட அச்சு" என்று மொழி பெயர்த்தார், "ரோமர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, ஒரு புதிய ஜீவியாக வடிவமைக்கப்படும்படிக்கு இந்த வார்ப்பட அச்சினுள் இடப்பட்டனர்" என்று அவர் விளக்கம் அளித்தார்.[13]

"உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டம்" (வசனம் 17) என்ற சொற்றொடர்பற்றிச் சிலவிஷயங்கள் கூறப்பட வேண்டும். "ஒப்புவிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*paradidomi* என்பதிலிருந்து வந்துள்ள) கிரேக்கவார்த்தையானது, "ஒப்படைக்கப்பட்ட" என்ற அடிப்படை அர்த்தம் தருவதாக உள்ளது.[14] சில மொழிபெயர்ப்பாளர்கள் இந்தச் சொற்றொடரை "உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட உபதேச சட்டம்" என்று விளக்கப்படுத்தியுள்ளனர் (KJV வேதாகமத்தில் காணவும்) - மற்றும் இது அனேகமாக, இதைப் புரிந்துகொள்வதற்கான மிகச்சுலபமான வழியாக இருக்கலாம். இருப்பினும், "ஒப்புவிக்கப்பட்ட" என்பதற்கான வினைச்சொல் செயப்பாட்டு வினையில் இருப்பதால், பெரும்பான்மையானவர்கள் இந்தச் சொற்றொடரை, கிறிஸ்தவர்கள் "வசனத்திற்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தனர்" என்பதைச் சுட்டிக்காட்டும்படி மொழிபெயர்க்கின்றனர். ஜேம்ஸ் எட்வர்ட்ஸ் என்பவர், "*உபதேச சட்டம்* நம்மைச் சார்ந்திருப்பதில்லை, ஆனால் நாம் உபதேச சட்டத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்.[15] NEB வேதாகமத்தில், "நீங்கள் கீழ்ப்படுத்தப்பட்டுள்ள அந்த உபதேசம்" என்றுள்ளது.

பவுலின் வாசகர்கள், "மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்தபோது" (வசனம் 17), அவர்கள் "பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்தனர்" (வசனம் 18) - அதற்கு முன்பு அல்ல. இதை வலியுறுத்துவதற்கு, KJV மொழிபெயர்ப்பாளர்களும் பிலிப்ஸ் என்பவரும் "பின்பு" [இது *தமிழில்* "போது" என்றுள்ளது] என்ற வார்த்தையைக் கூட்டியுள்ளனர். KJV வேதாகமத்தில், "being *then* made free from sin ..." என்றுள்ளது (வசனம் 18). வசனப்பகுதியிலுள்ள நிகழ்ச்சிகளின் வரிசைமுறை பின்வருமாறு:

- “பாவத்திற்கு அடிமைகள்” (வசனம் 17அ).
- “மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே” (வசனம் 17ஆ).
- “பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு” (வசனம் 18அ).
- “நீதிக்கு அடிமைகளானீர்கள்” (வசனம் 18ஆ).

இதற்கும், ஞானஸ்நானம் பற்றிப் பவுல் கூறியவற்றிற்குமிடையில் கருத்திசைவு ஒன்றுள்ளது. அவர், “புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு” (வசனம் 4), நாம் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து “எழுப்ப”பட்டிருக்கிறோம் என்றும் (வசனம் 5), நாம் “[கிறிஸ்துவின்] உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டிருக்கிறோம்” என்றும், நமது “பாவசரீரம் ஒழிந்துபோயிற்று” என்றும் (வசனம் 6) கூறினார். பின்பு அவர் அதே சொற்றொடராக்கத்தை 18ம் வசனத்திலுள்ளது போலவே பயன்படுத்தினார்: அந்த வேளையில், நாம் “பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டோம்” (வசனம் 7).

இது நாம் இரட்சிக்கப்படுவதற்குச் சில சடங்காச்சாரங்களைச் செய்து, சில சடங்குகளைப் பின்பற்ற வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? “அல்லவே!” ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்கள் “மனப்பூர்வமாய்க் [*kardia*] (இருதய பூர்வமாய்) கீழ்ப்படிந்ததால்” (வசனம் 17), பவுலினால் எண்ணியுரைக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அவர்களுக்குரியவைகளாயின. “கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, *அன்பினால்* கிரியை செய்கிற விசுவாசமே உதவும்” (கலாத்தியர் 5:6).

“கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்” என்று வேதாகமம் போதிக்கிறது (1 சாமுவேல் 16:7; 16:1-13ஐக் காணவும்). வேதவாக்கியங்கள் முழுவதிலும், முழு இருதயத்தோடு கர்த்தருடைய சித்தத்தைச் செய்தலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது (உபாகமம் 10:12; 1 சாமுவேல் 12:20; எபேசியர் 6:6 ஆகிய வசனங்களைக் காணவும்). கர்த்தர் *பூரணமான* கீழ்ப்படிதலை எதிர்பார்த்ததில்லை (எவரொருவரும் அவ்வாறு செய்ய முடியாது), ஆனால் அவர் “எவ்விதமான முன்விருப்பத்தேர்வுமற்ற” (ரோமர் 6:17) “முழு இருதயத்துடனான” கீழ்ப்படிதலைக் கேட்கிறார்.

பாவிகள் தங்கள் இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறபோது, அவர்கள் “பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகின்றனர்” (வசனம் 18அ). பாவத்தின் விலங்குகள் முறிக்கப்பட்டன, அவர்கள் *விடுவிக்கப்பட்டனர்.* இது அவர்கள் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டனர், தேவனையோ அல்லது மனிதரையோ மதிக்காமல் தாங்கள் விரும்புகிற எதையும் செய்ய விடுதலையாக்கப்பட்டனர் என்று அர்த்தப்படுகிறதா? அப்படி இல்லை! பவுல், “பாவத்தினின்று [தவறான வாழ்விலிருந்து] நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு [சரியான வாழ்விற்கு] அடிமைகளானீர்கள்” என்று கூறினார் (வசனம் 18).

பவுல், “... எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?” என்று கூறியிருந்தார் (வசனம் 16) என்பதை நினைவில் வையுங்கள். அவர்கள் “மனப்பூர்வமாய்” தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்ததால், இப்போது அவர்கள் *தேவனுடைய* அடிமைகளாயிருந்தனர். அதுவே அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது அவர்கள் ஏற்படுத்தியிருந்த உறுதிப்பாடாக இருந்தது.

# ஒரு நிகழ்காலத்திய விருப்பத்தேர்வு
# *(6:19, 20)*

*நமது வசனப்பகுதியின் இந்த இடத்தில், பவுல் தாம் ஏன் கிறிஸ்தவத்தை அடிமைத்தனத்துடன் ஒப்பிட்டார் என்பது பற்றி விளக்கம் அளிக்கச் சற்றே நிதானித்தார். அவர் அடிமைத்தனம் என்பது கடும் வெறுப்புக்குரியதாக இருந்தது மற்றும் அது மாபெரும் துக்கத்தின் ஆதாரமூலமாக இருந்தது என்பதை அறிந் திருந்தார். இவ்வாறாக அவர், "உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன்" என்று கூறத் துரிதப்பட்டார் (வசனம் 19அ). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "உங்களுக்குப் பழக்க மான ஒரு விவரிப்பை நான் பயன்படுத்துகிறேன், ஏனென்றால் வேறு விதத்தில் கூறினால் நீங்கள் என் போதனையைப் புரிந்துகொள்ளாது போகலாம்" என்று கூறினார்.*

*பவுல், கிறிஸ்தவ வாழ்வை அடிமைத்தனத்துடன் ஒப்பிட்டது ஏன்? கிறிஸ்தவத்திற்கும் அடிமைத்தனத்திற்குமிடையில் பொதுவான நடைமுறைப் படுத்துதலில் பெரிய பிளவு ஒன்றிருந்தது: தேவனுக்கு அடிமையாயிருத்தல் என்பது கடப்பாடாக இல்லாமல் தன்னார்வமானதாக இருந்தது, மற்றும் கர்த்தர் ஒரு கொடூரமான எஜமானரல்ல. சற்றுமுன் குறிப்பிட்டபடி, பவுல் அடிமைத்தனத்தின் பிரபலமான தன்மையினிமித்தமாகவே அதை ஒரு ஒப்புவமை யாகப் பயன்படுத்தினார்; ஆனால் ஹல்போர்டு லுயுகாக் என்பவர், கூடுதலாக இன்னொரு காரணத்தைக் கருத்தாகத் தெரிவித்தார். அவர் " 'அடிமை' என்பது ஒரு பலமான வார்த்தையாக உள்ளது. ஆனால் தேவனுக்கு அடிமைத்தனம் என்பது ஒரு பலமான விஷயமாக உள்ளது. இதைக்காட்டிலும் குறைவான வேறு எந்த வார்த்தையும், கிறிஸ்து வற்புறுத்துகிற பிளவுபடாத பற்றுறுதியைச் சித்தரிக்க இயலாது" என்று எழுதினார்.[16]*

*பவுலின் வாசகர்கள் "மனப்பூர்வமாய்" தேவனுக்குக் கீழ்ப்படிந்ததின் மூலம், செயல்விளைவில் கர்த்தருக்கு முழுஇருதயத்துடனான பற்றுறுதியை வாக்களித்தனர். இப்போது பவுல் அவர்கள் ஏற்படுத்தியிருந்த உறுதிப்பாட்டிற்கு ஏற்றவாறு* வாழும்படி *ஊக்கப்படுத்தினார்: "அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத் திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்த மானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" (வசனம் 19). கடந்தகாலத்தில், அவர்கள் பாவத்திற்கு அடிமைகள் என்ற வகையில், தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர், மற்றும் அவர்கள் யாவரும் "அசுத்தத்திற்கும் [*akatharsia*] அக்கிரமத் திற்கும் [*anomia*]" ஒப்புக்கொடுத்திருந்தனர் (வசனம் 19ஆ). அவர்களின் ஒப்புக் கொடுத்தலானது வலிவார்ந்ததாக இருந்தது; அவர்கள் ஒருக்காலும் திருப்தி யடையாத நிலையில் பாவத்திற்குள் ஆழமாக, ஆழமாக வளர்ந்திருந்தனர் (வசனம் 19இ). இப்போது அவர்கள் தேவனுடைய அடிமைகளாகியுள்ள நிலையில் சமரசம் செய்யமுடியாத அதே ஒப்புக்கொடுத்தலைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டும்: "இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" (வசனம் 19ஈ).*

*பவுலின் புத்திகூறுதலை நான் வாசிக்கையில், "மக்களில் சிலர் புகழ், பணம்,*

அல்லது அதிகாரம் ஆகியவற்றை நாடுவதற்குக் கொண்டுள்ள ஒரேசிந்தையை" பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன்.[17] பின்பு நான் அதை மக்கள் மிகவும் அடிக்கடி அரை இருதயத்துடன் கிறிஸ்தவத்தை அணுகும் செயலுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பார்க்கிறேன். சிலர், "பாவத்துடன், அசைக்கமுடியாத முறிக்க முடியாத கடமைப்பொறுப்பையும், நீதியுடன், விருப்பத்தேர்விலான, மாறக்கூடிய கடமைப்பொறுப்பையும் கொண்டுள்ளதாக உணருகின்றனர்" - ஆனால் "இதற்கு எதிர்மாறானதே மிகச்சரியான உண்மை என்றுள்ளது!"[18] ஒரு மனிதர், பவுலின் அறைகூவலினுடைய சாராம்சத்தைப் பற்றிப்பிடித்தார். அவர் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவித்தபின்பு, "நான் எவ்வளவுக்குப் பாவியாக இருந்தேனோ, அவ்வளவுக்குப் பரிசுத்தவானாக இருக்க விரும்புகிறேன்!" என்று கூறினார்.[19]

மக்கள் பாவத்திற்குத் தங்கள் வாழ்வை ஒப்புக்கொடுக்கும்போது, அது "மேலும் அக்கிரமத்தை" விளைவிக்கிறது (வசனம் 19இ). அவர்கள் தங்களை நீதிக்கு ஒப்புக்கொடுக்கும்போது, "பரிசுத்தமாகுதல்" [*hagiasmos*]" அவர்களுக்குக் கிடைக்கும் பலன் (வசனம் 22ஆ). பரிசுத்தமாகுதல் என்பதற்குரிய ஆங்கிலவார்த்தையான "sanctification" என்பது "holiness" என்றும் மொழி பெயர்க்கப்படக் கூடும், இது தேவனால் "பிரித்துவைக்கப்பட்டு" இருத்தல் என்பதை - ஒரு பரிசுத்தமான வாழ்வை, அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்வை வாழப் பிரித்துவைக்கப்படுதல் - என்பதைக் குறிக்கிறது.

தேவனால் "பிரித்து வைக்கப்பட்ட" மக்களாக *நடந்துகொள்ளுதல்* என்பதே நமக்கான அறைகூவலாக உள்ளது. கொரிந்தியருக்குப் பவுல், "... மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 7:1). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று கூறினார் (எபிரெயர் 12:14). இதை யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதிவைத்தார்: "நாம் யாராக *இருக்கிறோமோ* (அதாவது, *பரிசுத்தமாக்கப்பட்டிருத்தல்*) அவ்வாறே *ஆகுதல்* என்பதே கிறிஸ்தவ அறைகூவலாக உள்ளது."

பின்பு பவுல், "பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள்" என்று குறிப்பிட்டார் (ரோமர் 6:20). நாம் பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் வரைக்கும், நீதிக்கு ஊழியம் செய்ய, சரியானதைச் செய்யக் கடமையற்றவர்களாக இருக்கிறோம். இதற்கு எதிர்க்கூற்றும் உண்மையானதாகவே உள்ளது: நாம் தேவனுக்கு அடிமைகளானவுடனே, பாவத்தைப் பொறுத்தமட்டில் நாம் அதற்கு விடுதலையானவர்களாக இருக்கிறோம், இனியும் நாம் அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருப்பதில்லை.

19 மற்றும் 20ம் வசனங்களில், பவுல் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கத் *தொடர*வேண்டும் என்று ஊக்குவித்தார். சிலர் ஒருதரம் தாங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடிவெடுத்து பாவத்திலிருந்து விடுதலையான பின்பு, பாவத்தைக் குறித்து இனியும் முடிவுகள் எடுக்கத் தேவையில்லை என்று நினைக்கலாம் - ஆனால் ஒவ்வொரு நாளுமே முடிவெடுக்கும் நாளாக உள்ளது. நாம் அன்றாடம் குறுக்கு சாலைகளில் நின்றுகொண்டு "ஜீவனுக்குப் போகிற" இடுக்கமான வழியைத் தொடருதல்

*அல்லது "கேட்டுக்குப் போகிற" விசாலமான வழிக்குத் திரும்புதல் என்ற இரண்டிற்கும் இடையில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 7:13, 14).*

## *நிரந்தரமான விளைவுகள் (6:21-23)*

*நாம் குறுக்குச் சாலைகளில் நிற்கும்போது, சரியான தெரிவை மேற்கொள்ள நம்மை ஊக்குவிப்பது எது? பவுல் தமது வாசகர்களுக்கு (மற்றும் நமக்கு), ஒவ்வொரு சாலையையும் அதன் நிறைவான அடைவிடத்தைக் காணும்படி உற்றுநோக்குமாறு அறைகூவல் விடுத்தார். முதலில் அவர், "இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது!" என்று கேட்டார் (வசனம் 21அ). "பலன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (karpos) என்ற கிரேக்க வார்த்தையானது "கனி" என்பதற்குரிய வார்த்தையாக உள்ளது (KJVயில் காணவும்).* NIV *வேதாகமத்தில்,* "What benefit did you reap ... ?" *("நீங்கள் அறுவடை செய்த பலன் என்ன?") என்றுள்ளது.*

*"இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். குறைவான உறுதிப்பாடு கொண்டுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் முன்னாளைய வாழ்வை ஏக்கத்துடன் பின்னோக்கிப் பார்க்கின்றனர் என்பது கவலைக்குரிய விஷயமாக உள்ளது. அவர்கள், எகிப்திய அடிமைத்தனத்தை மறந்தவர்களாகத் தங்கள் கடந்தகாலத்தை ஆழ்ந்த விருப்பத்துடன் கண்ணோக்கிய இஸ்ரவேலர்களைப் போலவே இருக்கின்றனர் (எண்ணாகமம் 11:5ஐக் காணவும்). அவர்கள் தெருவிலிருந்து மீட்கப்பட்ட ஒரு அனாதைக் குழந்தையுடன் ஒப்பிடக்கூடியவர்களாக உள்ளனர். அந்தக்குழந்தை தான் உண்ட கேக்குத் துண்டு ஒன்றை நினைவில் வைத்திருக்கிறது, ஆனால் அந்தக் கேக்குத் துண்டு குப்பைத்தொட்டியிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை மறந்துபோயிருக்கிறது. பவுல் குறிப்பிட்ட மக்கள், தங்கள் முன்னாளைய பாவம் நிறைந்த வாழ்வைக் குறித்து வெட்கப்பட்டிருந்தனர் என்பது அவர்களுக்கு மதிப்புள்ள விஷயமாக உள்ளது.*

*அவர்கள் தங்களின் வெட்கக்கேடான வாழ்விலிருந்து தரவழைத் திருந்த பயன் என்ன என்பது பற்றி மும்முரமாக ஆழ்ந்து சிந்திக்கும்படி பவுல் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். பாவத்தினாலுள்ள "பிரயோஜனங்கள்" சில இங்கே உள்ளன: ஒரு குற்ற மனச்சாட்சி, நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டுள்ளாரோ, அவ்வாறு இருக்கத் தவறிய ஒரு தோல்வி, நாம் அன்புகூருபவர்களிடத்திலிருந்து விலகியிருத்தல், மற்றும் நாம் பெற்றிருக்கும்படிக்குத் தேவன் விரும்பும் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்க இயலாமை. ஆவிக்குரிய மரணம் என்பதே மிகவும் பயங்கரமான விளைவாக உள்ளது. பவுல், "இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்திலே உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே" என்று கூறினார் (ரோமர் 6:21). இங்கு "மரணம்" என்பது எல்லாருக்கும் வருகிற (எபிரெயர் 9:27), மற்றும் சிலவேளைகளில் பாவ மற்ற குழந்தைகளுக்கும் வருகிற, உடல்ரீதியான மரணத்தைக் குறிப்பிடுவ தில்லை. மாறாக, இது ஆவிக்குரிய மரணத்தை, தேவனிடத்திலிருந்து பிரிதலைக் குறிப்பிடுகிறது (ஏசாயா 59:1, 2). இந்த சந்தர்ப்பப்பொருளில் இது,*

*“நித்திய ஜீவன்” என்பதுடன் வேறுபடுத்தி ஒப்பிடப்படுவதால் (ரோமர் 6:22), “நித்திய மரணத்தை” - அதாவது, தேவனுடைய பிரசன்னத்திலிருந்து நித்தியத்திற்கும் பிரிக்கப்பட்டிருப்பதையே (2 தெசலோனிக்கேயர் 1:7) - பவுல் தமது சிந்தையில் கொண்டிருப்பார் என்பது தெளிவு. பாவம் என்பது ஒரு நண்பனாக இருப்பதாக வாக்களிக்கிறது, ஆனால் உண்மையில் அது ஒரு விரோதியாக உள்ளது; அது விடுதலையை வாக்களிக்கிறது, ஆனால் அது அடிமைத்தனத்தையே கொண்டுவருகிறது; அது சந்தோஷத்தை வாக்களிக்கிறது, ஆனால் அது வியாகுலத்தையும் அவமானத்தையுமே கொண்டு வருகிறது; அது ஜீவனை வாக்களிக்கிறது, ஆனால் அது முடிவில் மரணத்தையே கொண்டுவருகிறது.*[20]

*பாவம் என்ற சாலையின் முடிவில் மரணம் உள்ளது (மத்தேயு 7:13ஐக் காணவும்). மற்ற சாலையில் உள்ளது என்ன? பவுல் தொடர்ந்து, “இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்” என்று கூறினார் (ரோமர் 6:22). கிறிஸ்தவர் நீதியின் பாதையில் தொடர்ந்து நடக்கும்போது, அவர் பரிசுத்தமாக்கப்பட்ட (பிரித்து வைக்கப்பட்ட) நிலையில் வாழ்கிறார். இவ்வாறாக, “பரிசுத்தமாக்கப்படுதல்” என்பது ஒரு விளைவாக உள்ளது.* NIrV *வேதாகமத்தில்,* “The benefit you gain leads to holy living” *(“பரிசுத்தமாக வாழுதல் என்பது நீங்கள் ஆதாயப்படுத்திக்கொள்ளும் பலனாக உள்ளது”) என்று காணப்படுகிறது. மிகமுக்கியமாக, அந்த சாலையில் பயணம் செய்தல் என்பது கடைசியாக ஜீவனுக்கு வழிநடத்துகிறது (மத்தேயு 7:14ஐக் காணவும்): “முடிவோ நித்திய ஜீவன் [கர்த்தருடனும் மீட்கப்பட்டவர்களுடனும் நித்தியம் முழுவதிலும் வாழுதல்]” (ரோமர் 6:22ஆ)!*

*தேவனுக்கு அல்லது பாவத்திற்கு ஊழியம் செய்தலின் விளைவுகளை எவ்வாறு ஒருவர் தொகுத்துரைக்கலாம்? 23ம் வசனமானது, ரோமருக்கு எழுதிய நிருபத்தில் நன்கு அறியப்பட்ட வசனங்களில் ஒன்றாக, பவுலின் தொகுப்புரையாக உள்ளது: “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.”*

*பாவத்தின் சம்பளம், சந்தோஷம், புகழ் மற்றும் வெற்றி ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக மக்கள் பலர் நினைக்கின்றனர்; ஆனால் விஷயம் அப்படியிருப்பதில்லை என்று பவுல் கூறினார். “பாவத்தின் சம்பளம் மரணம்” (வசனம் 23அ), இது ஆவிக்குரிய மரணமாகும். “சம்பளம்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (opsonion என்பதிலிருந்து வந்துள்ள கிரேக்க) வார்த்தை, செய்யப்பட்ட ஊழியங்களுக்கான ஊதியத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. பவுல் திரும்பவும் “இராணுவ உருவகத்தை” பயன்படுத்தினார் என்று எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.*[21] *பார்க்ளே என்பவர், “Opsonia என்பது போர்வீரனின் ஊதியமாக, அவன் தனது உடலை இடர்ப்பாட்டிற்கு உட்படுத்தியும் தனது புருவத்தின் வியர்வையாலும் ஈட்டிய சம்பளமாக, அவனுக்குரிய ஒன்றாக மற்றும் அவனிடத்திலிருந்து எடுக்கப்படக்கூடாததாக உள்ளது” என்று எழுதினார்.*[22] *பாவம் நிறைந்த வாழ்வுவாழும் ஒருவர் எதைப்பெறத் தகுதியானவராக இருக்கிறார்? அவர் ஈட்டியுள்ளது என்ன? மரணம்!*

*அதற்கு நேர்மாறாக பவுல், “தேவனுடைய கிருபைவரமோ [charisma, அதாவது அருட்கொடை] நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால்*

*உண்டான நித்தியஜீவன்"*[23] *என்று கூறினார் (வசனம் 23ஆ). பாவம் ஒரு கூலியைத் தருகிறது, ஆனால் தேவனோ ஒரு வரத்தை அருளுகிறார். "வரம்" என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். பவுல் இந்த அதிகாரத்தில் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் (வசனங்கள் 16, 17ஐக் காணவும்). நமது கீழ்ப்படிதல் என்பது நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக உள்ளது (1:5; 16:26). இது விசுவாசித்துக் கீழ்ப்படிவதினால், நாம் நமது இரட்சிப்பை ஈட்டுகிறோம் என்று அர்த்தப்படுகிறதா? இல்லவே இல்லை. இரட்சிப்பு என்பது எப்போதுமே ஒரு* வரமாக *இருக்கும் மற்றும் இருக்க வேண்டும் - இது தேவனுடைய கிருபை வரமாக உள்ளது. விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை, அவருடைய ஆச்சரியமான வரத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவரால் நியமிக்கப்பட்ட வழியாக மாத்திரம் உள்ளன.*

*இரண்டு விளைவுகளைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள்: "மரணம்" எதிர். "நித்தியஜீவன்." ஒருநாளில், நீங்கள் எதைப் பெறுவீர்கள்? நீங்கள் எதைப்பெற* விரும்புகிறீர்கள்? *யாருக்கு ஊழியம் செய்வது என்பதை நீங்கள் தேர்ந்துகொள்ளச் சுயாதீனம் பெற்றிருக்கிறீர்கள் என்று கூறப்பட்டுள்ளது, ஆனால், ஒருமுறை நீங்கள் அந்தத் தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்திவிட்டால், உங்கள் தேர்ந்து கொள்ளுதலின் விளைவுகளைத் தேர்ந்துகொள்ள நீங்கள் சுயாதீனம் பெற் றிருப்பதில்லை. நீங்கள் மரணத்தை* விரும்புவதில்லை *என்றால், நீங்கள் நித்திய ஜீவனை* விரும்பினால், *இன்றே உங்கள் வாழ்வைப் பாவத்திற்குப் பதிலாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானியுங்கள்!*

## முடிவுரை

*சிலர் பாவத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர், ஆனால் அதை அறியாதிருக் கின்றனர்; மற்றவர்கள் தேவனுக்கு அடிமைப்பட்டுள்ளனர், ஆனால் அதைப்போன்று செயல்படாதிருக்கின்றனர். பாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தும் அதை அறியாதிருக்கிறவர்கள், இந்த உலகத்தில் ஒருக்காலும் தங்கள் வாழ்வைக் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்தாதவர்களாக உள்ளனர். அது உங்களைப் விவரிக்கும் விஷயமாயிருந்தால், நீங்கள் பாவத்தை விட்டொழித்து, பாவத்திலிருந்து விடுதலையாகி இருக்கும்படித் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ளும்படிக்கு நான் ஜெபிக்கிறேன் (ரோமர் 6:3, 4, 17, 18).*

*நமது வேதபாடப்பகுதியில், பவுலின் அக்கறை, தேவனுக்கு அடிமைப்பட்டிருந்தும் அதற்கேற்பச் செயல்படாமல் இருப்பவர்களைப் பற்றியதாகவே இருந்தது. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் "புதிய மேலாண்மையின்கீழ்" இருக்கிறீர்கள் என்பதை ஒருக்காலும் மறந்துவிடாதீர்கள். அதுவே விஷயமாக இருந்தால், நீங்கள் அதற்கொப்பச் செயல்படவேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன்!*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, அரைமனதாக உள்ள கிறிஸ்தவர்கள் மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பும்படி அவர்களை*

உற்சாகப்படுத்துங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16, 19, 20). ஆராதனை ஊழியத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒருபாடல் பின்வருமாறு: "எந்தன் ஜீவன், இயேசுவே, சொந்தமாக ஆளுமே."

சார்லஸ் ஸ்வின்டால் என்பவர் இந்தப் பகுதிக்கு "நீங்கள் யாருக்கு அடிமையாக இருக்கிறீர்கள்?" என்று தலைப்புக்கொடுத்தார்.[24] ரிச்சர்டு ரோஜர்ஸ் என்பவர் நமது வேதபாடப்பகுதியின்மீதான தமது சிந்தனைகளை "புதிய" என்பதை ஆய்வுக்கருத்தாகக் கொண்டு ஒருங்கமைத்தார் (6:4ஐக் காணவும்): புதிய கடமைப்பொறுப்புகள் (வசனங்கள் 14-18), புதிய கடமைகள் (வசனங்கள் 19, 20), புதிய வெகுமதிகள் (வசனங்கள் 21-23).[25]

"பரிசுத்தமாகுதல்" பற்றி நீங்கள் பேசும்போது, உங்கள் கலாச்சாரத்திற்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடிய விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகப் பிரித்து வைக்கப்படும் சிலபொருள்கள்/விஷயங்கள் பற்றி நினைத்துப் பாருங்கள். டேல் ஹார்ட்மேன் என்பவர் அமெரிக்காவிலுள்ள பிள்ளைகளுக்கு "பரிசுத்தவான்" என்ற வார்த்தையைப் பற்றிப் பேசுகிறபோது, அவர் ஒரு பல்துலக்கியின் விவரிப்பைப் பயன்படுத்துகிறார். பற்களைச் சுத்தப்படுத்துவதற்கென்று தனியே வைக்கப்பட்டுள்ள ஒரு கருவியானது, சித்திரம் தீட்டுதல் போன்ற தவறான நோக்கத்திற்கு ஒருக்காலும் பயன்படுத்தப்படக் கூடாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடியும்.

---

குறிப்புகள்

[1]பல ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "Law" (with a capital "L") (AB; CEV; Phillips) அல்லது "the law" (McCord; NLT) என்றுள்ளது, இதில் "law" என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறதாக சுட்டிக்காட்டுகிறது. இந்தக் கலந்துரையாடலில், பவுலின் சிந்தையில் மோசேயின் நியாயப்பிரமாணம் இருந்தது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை (7:7ஐக் காணவும்); ஆனால் கிரேக்க மொழிவசனத்தில், "law" என்ற வார்த்தைக்கு முன் திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இருப்பதில்லை, எனவே நடைமுறைப்பயன்பாடு, மோசேயின் பிரமாணம் மாத்திரம் என்பதைக் காட்டிலும் பரந்ததாக உள்ளது. [2]James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 238; Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 92; Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 202. [3]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 134. [4]"அடிமைகள்" என்ற வார்த்தையின் எதிர்மறை பொருளின் காரணமாக, சில மொழிபெயர்ப்புகள் "ஊழியர்கள்" என்ற வார்த்தையை இவ்விடத்தில் பயன்படுத்துகின்றன (KJV வேதாகமத்தைக் காணவும்); ஆனால் கிரேக்க வசனத்தில் "அடிமை" என்று அர்த்தப்படும் *doulos* என்ற வார்த்தையின் பன்மைப்பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. [5]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 438. [6]Gerhard Kittel, *"hypakoē"* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 35. (Emphasis mine.) [7]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House,

2000), 210. [8] *ரோமருக்கு எழுதிய நிருபம், 2* என்ற புத்தகத்தில், "இரண்டு ஆதாம்கள் [*5:12-21*]" என்ற பாடத்தில் "மாதிரி" மற்றும் "எதிர்மாதிரி" என்பதன்மீதான கலந்துரையாடலில் காணவும். [9]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 837. [10]*1* கொரிந்தியர் *15:3*ல் "ஒப்புவித்த" என்பது, ரோமர் *6:17*ல் "ஒப்புவிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே கிரேக்க வார்த்தையிலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுதல் மதிப்புள்ளதாயிருக்கிறது.

[11]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 125. [12]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 89. [13]James Macknight, *A New Literal Translation, from the Original Greek of All the Apostolical Epistles with a Commentary and Notes* (N.p.: n.d.; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 87. [14]Vine, 156. [15]James R. Edwards, *Romans,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 173. [16]Halford E. Luccock, *Preaching Values in the Epistles of Paul,* vol. 1, *Romans and First Corinthians* (New York: Harper & Brothers, 1959), 43. [17]Moo, 211. [18]D. Stuart Briscoe, *Mastering the New Testament: Romans,* The Communicator's Commentary Series (Dallas: Word Publishing, 1982), 140. [19]Quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 533. [20]Adapted from McGuiggan, 204.

[21]Edwards, 175. ரோமர் *6*ல் இதற்கு முன்புள்ள இராணுவ உருவகம் பற்றி, *ரோமருக்கு எழுதிய நிருபம், 1* என்ற புத்தகத்தில் "கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய ஜீவனை வாழ்வது எப்படி?" *(6:5-14)* என்ற பாடத்தில் *13*ம் வசனத்திற்கான விளக்கத்தில் காணவும். [22]Barclay, 91. [23]மீண்டும் ஒருமுறை பவுல், தேவனுடைய ஆசீர்வாதங்கள் "கிறிஸ்துவுக்குள்" உள்ளன என்று உரைத்தார். நாம் எவ்வாறு "கிறிஸ்துவுக்குள்" வருகிறோம் என்பதைக் குறிப்பிட்டு, இந்த சத்தியத்தை நீங்கள் வலியுறுத்த விரும்பலாம் *(6:3)*. [24]Charles R. Swindoll, *Learning to Walk by Grace: A Study of Romans 6-11* (Fullerton, Calif.: Insight for Living, 1985), 6. [25]Adapted from Rogers, 93.